. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936



வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!



www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 27.03.2026 • மலர் 04 • இதழ்: 85 • Edition : Nagercoil • 27.03.2026 • Vol : 04 • Issue : 85 • Page : 4 • Rs. 5/-


### ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸுக்கு

# 28 எம்.எல்.ஏ. சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு

## சீமான் கடும் விமர்சனம்

மேட்டூர் ,மார்ச். 27

"ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபாசீட்டுகொடுத்து கூடவே வைத்திருக்கிறர்கள்," எனநாதகதலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திமுகவை விமர்சித்துள்ளார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட மேச்சேரி பேருந்து நிலையம் முன்பு இன்று நடந்த பிரச்சாரத்தில் நாதகவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மேட்டூர் வேட்பாளர் வித்யா வீரப்பனைஆதரித்துபிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது: ஒரு சொட்டு தண்ணீர் கொடுக்க முடியாது என்று கர்நாடக முதல்வர் சொல்கிறார். நமது முதல்வர் கர்நாடகா காங்கிரஸ் வெற்றிக்காக பிரச்சாரம் செய்தார். கட்சித் தலைவராக போய்க் கேட்பது தவறில்லை, ஆனால், முதல்வர் என்ற பெயரில் போய்க் கேட்பது எந்த விதத்தில் நியாயம்? ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு கொடுத்து கூடவே வைத்திருக்கிறர்கள்.

கச்சத்தீவு, காவிரி நீர் உரிமை, முல்லை பெரியாறு உரிமை எனஅனைத்தையும் இழந்து நிற்கிறோம். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு வழக்கை கருணாநிதி திரும்பப் பெற்றார். இதனால்500டிஎம்சி பெற வேண்டிய நாம் 150 டி.எம்சி.க்காக கையேந்தி நிற்கிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தண்ணீர் தேவையில் தன்னிறைவு திட்டம் கொண்டுவந்து கடலில் கலக்கிறதை தடுத்து நிறுத்தி ஏரிகள், குளங்களை நிரம்பி அடுத்தவரிடத்தில் கையேந்தி நிற்கிற நிலைமையை மாற்றுவோம்.

ஒரு விழுக்காடு, அரை விழுக்காடு வைத்திருக்கிறவர்கள் கூட்டணிக்காக பேரம் பேசி செல்கிற நேரத்தில் தனித்தன்மையாக மக்களை சந்தித்து 8.5 விழுக்காடு வாக்கு வைத்திருக்கிறோம். திமுக அதிமுக தனியாக இதுதான் எங்கள் வாக்குகள் என்று சொல்ல முடியாது. எவ்வளவோ பதவி ஆசை காட்டியபோதும், நாங்கள் பதவி, பணத்திற்காக வந்தவர்கள் அல்ல மக்களின் உதவிக்காகவும், தமிழ் இனத்திற்காகவும் வந்தவர்கள். மாற்றம் என்பது சொல் அல்ல அது செயல்.

நாங்கள் வந்தால் மிக்சி, கிரைண்டர் அண்டா, பிரிட்ஜ், டிவி, ரூ 5,000, ரூ 10,000, தருவோம் என்றெல்லாம் சொல்ல மாட்டோம். நீங்கள் அதனை வாங்கிக் கொள்கிற வேலைவாய்ப்பும், வருவாய் பெருக்கத்தையும் ஏற்படுத்தி கொடுப்போம். ஆட்சிக்கு வந்தவுடன் டாஸ்மாக்கை மூடுவேன். பனை பால், தென்னை பால், ஈச்சம் பால், மூலிகைச்சாறு என்று கல்லை திறந்து விடுவேன்.

அதிமுக, திமுக வெல்வது சாதாரண நிகழ்வுதான். அவர்கள் பலமுறை வென்று இருக்கிறார்கள் ஆனால், நாங்கள் வெல்வது சரித்திரத்தில் பதிவிடும் மாபெரும் புரட்சி. வீரப்பன் திருடன் என்றால் ஜெயலலிதா, கருணாநிதிக்குஎன்னபெயர்?




விற்றவனை தேடிப் பிடிக்க அலைந்தார்கள். ஆனால், வாங்கியவனை ஏன் தேடவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

போலீஸாருடன் நாதக நிர்வாகிகள் வாக்குவாதம்: மேச்சேரி பேருந்து நிலையம் முன்பு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வாகன பிரச்சாரம் மேற்கொண்டார். அவரது பிரச்சார வாகனம் மற்றும் ஒளிப்பதிவு மேற்கொள்ள வந்த வாகனம் சாலை நடுவே நிறுத்தியதால் போக்குவரத்துக்கு நெரிசல் ஏற்பட்டது.

அப்போது பாதுகாப்புப் பணியில் இருந்த மேச்சேரி காவல் ஆய்வாளர் மகேந்திரன் தலைமையிலான போலீஸார் வாகனத்தை ஓரமாக நிறுத்துமாறு அறிவுறுத்தினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போலீஸார் உடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர், சீமான் வந்ததால் வாக்குவாதத்தை கைவிட்டு, அவரது பேச்சை கவனிக்க தொடங்கினர்.

### தனக்கு மட்டும் பதவி..

## கட்சிக்காக உழைத்தவர்களை விட்டுவிட்டார் கமல்ஹாசன்

### வானதி சீனிவாசன் குற்றச்சாட்டு



சென்னை, மார்ச். 27

தேசிய பாஜக மகளிரணி தலைவர்வானதிசீனிவாசன் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில, மக்கள் நீதி மையத்தின் தலைவர் கமலஹாசன் கட்சி ஆரம்பித்து அதன் பின் 2019ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டார். அந்த தேர்தலில் மக்கள் நீதி மையத்திற்கு பொதுமக்கள் வாக்களித்தார்கள். ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தங்களது பணத்தை செலவு செய்து அவருக்காக உழைத்தனர். ஆனால் கமலஹாசன் தன்னுடைய சுயநலத்திற்காக தான் மட்டும் மாநிலங்களவை எம்.பி. ஆகிவிட்டு அவரை நம்பி அவருடைய கட்சியில் உள்ளவர்களை அம்போ என விட்டுவிட்டார்.

இந்த நேரத்தில் நான் கோவை தெற்கு தொகுதியில் உள்ள மக்களுக்கு நன்றி சொல்கிறேன். ஏனென்றால் மிக சரியான பதிலை கமலஹாசனுக்கு கொடுத்துள்ளார்கள். தனது கட்சிக்கு கூட விசுவாசமாக இல்லாமல், கட்சியில் உள்ள தொண்டர்களை காப்பாற்ற முடியாத ஒருவர் எப்படி ஒரு கட்சியை ஆரம்பித்து வீணாக போனது என்பதற்கு மக்கள் நீதி மய்யமே சாட்சி ஆகும். புதிதாக கட்சி ஆரம்பிக்கும் எல்லாருக்கும் இவர் நமக்காக வேலை செய்வாரா, நம்முடைய குரலாக தொடர்ச்சியாக பயணிப்பாரா, தனது கொள்கை அரசியல் என்று வரும்போது அதை சமரசம் செய்யாமல் இருப்பாரா என்று பார்ப்பதற்கு கமலஹாசனும் அவருடைய கட்சியும் சிறந்த உதாரணம். யார் எப்படி என்று இந்த கட்சியை பார்த்து மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

## தொகுதி எண்ணிக்கை குறைவு: சிரித்துக்கொண்டே அழுகின்றோம்

### அர்ஜுன ராஜ் பேட்டி




சென்னை, மார்ச். 27

தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கூட்டணி கட்சிகளுக்கு தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நேற்று முன்தினம் நிறைவு பெற்றது. இதில் கூட்டணி கட்சிகளுக்கு 66 தொகுதிகளை ஒதுக்கியுள்ளது.

காங்கிரசுக்கு 28 தொகுதிகள், தே.மு.தி.க.வுக்கு 10, விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 8, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்கு 5, இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 5, ம.தி.மு.க. 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள்கட்சி, கொ.ம.தே.க. ஆகியவற்றுக்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு உள்ளன. இதுதவிர கருணாஸ், தமிமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ. ஆகியவைகளுக்கும் தலா ஒரு தொகுதிகள் ஒதுக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், சென்னை அறிவாலயத்தில் தி.மு.க. தொகுதிப் பங்கீடு பேச்சு வார்த்தை குழுவுடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் எந்தெந்த தொகுதி என்பது தொடர்பாக ஆலோசனை நடத்தி வருகின்றனர். இந்த ஆலோசனையில் ம.தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற சந்திப்புக்கு பின், மதிமுக அவைத் தலைவர் அர்ஜுனராஜ் செய்தியாளர் சந்திப்பில் கூறியதா வது: மதிமுக சார்பில் நாங்கள் கொடுத்த விருப்பப்பட்டியலில் இருந்தே 4 தொகுதிகளை எங்களுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். நாங்கள் கேட்ட தொகுதிகளை ஒதுக்கீடு செய்தது மகிழ்ச்சி.. ஆனால் எண்ணிக்கை குறைந்ததில் வருத்தம். சிலர் சிரிப்பார் சிலர் அழுவார்.. நாங்கள் சிரித்துக் கொண்டே அழும் நிலையில் இருக்கிறோம்.

ம.தி.மு.க.வின்தகுதிக்குதகுந்தாற்போல் எங்களுக்கு தொகுதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ம.தி.மு.க.விற்கு ஒதுக்கப்பட்டுள்ள நான்கு தொகுதிகள் குறித்து இன்று மாலைக்குள் தெரிந்துவிடும் என்றார். இதனிடையே, மதுரைதெற்கு, மொடக்குறிச்சி, கோவில்பட்டி, சீர்காழி (தனி) ஆகிய தொகுதிகள் ம.தி.மு.க.வுக்கு ஒதுக்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

## "கேரளாவில் பாஜகவுக்கு அளிக்கும் வாக்குகள் அனைத்தும் வீண்தான்!"

### சசி தரூர் கண்டனம்



திருவனந்தபுரம், மார்ச். 27

கேரளாவில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடது ஜனநாயக முன்னணிக்கும் இடையேதான் போட்டி என்றும், இங்கு பாஜகவுக்கு அளிப்பவை வீணான வாக்குகள்தான் என்றும் சசி தரூர் தெரிவித்துள்ளார்.

கேரள சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 9ம் தேதி நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு மாநிலத்தில் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், கேரள தேர்தல் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய சசி தரூர், ''எனது முழு கவனமும் கேரள மாநில தேர்தல் மீதுதான் உள்ளது. அசாம், மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உள்ள எனது சகாக்கள் அனைவரும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கேரளாவைப் பொறுத்தவரை மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். இம்மாநிலத்தில் பாஜக என்பது முற்றிலும் புறக்கணிக்கத்தக்க சக்தி அல்ல என்றாலும், உண்மையான போட்டி என்பது ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடது ஜனநாயக முன்னணிக்கும் இடையேதான் உள்ளது. எனவே, பாஜகவுக்கு அளிக்கும் வாக்குகள் என்பது வீணான வாக்குகள்தான்'' என தெரிவித்துள்ளார்.

பஞ்சாப்நேஷனல்வங்கியில்ரூ.13,800 கோடிக்கும் அதிகமாக மோசடி செய்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நீரவ் மோடியை இந்தியாவுக்கு நாடு கடத்த இங்கிலாந்து நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்ட நிலையில், அதை எதிர்த்து அவர் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த அந்நாட்டு உயர் நீதிமன்றம் மனுவை தள்ளுடி செய்துள்ளது. இது குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த சசி தரூர், ''இது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விஷயம். சட்ட நடவடிக்கைகளில் இருந்து தப்பி ஓடியவர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புக அனுமதிக்கக்கூடாது.

அவர்கள் நிரபராதிகள் என்றால், தாராளமாக இந்தியாவுக்கு வரட்டும்; இங்குள்ள நீதிமன்றத்தின் முன்பும்; நீதிபதியின் முன்பும் நின்று நிராதிபதி என்பதை நிரூபிக்கட்டும். அதுவே மிகவும் நியாயமான அணுகுமுறை. ஆனால், நம் நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்த குற்றவாளிகள் பலர் உள்ளனர். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் நீதி அமைப்புகள் அத்தகைய குற்றவாளிகளை மீண்டும் இந்தியாவுக்கே திருப்பி அனுப்பினால், அது நமக்கு மிகவும் நன்மை பயப்பதாக இருக்கும்'' என தெரிவித்துள்ளார்.

## நாமக்கல் அங்கன்வாடி மையங்களில் சாதி பாகுபாடு நடைபெறுவது வெட்கக்கேடு

### அண்ணாமலை கண்டனம்



சென்னை, மார்ச். 27

தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் ஒன்றியம், காக்காவேரி ஊராட்சி புதுகாலனியில் பட்டியல் சமூக குழந்தைகளுக்கு தனியாகவும், பிற்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கு தனியாகவும் பல ஆண்டுகளாக இரண்டு அங்கன்வாடி மையங்கள் செயல்படுவது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

21ஆம் நூற்றாண்டில் கூட, இப்படி ஜாதிப்பாகுபாடு நடைபெறுவது வெட்கக்கேடு. ஏதுமறியா குழந்தைகளிடம், பிரிவினையை விதைக்கும் இந்த செயல், அரசியலமைப்பின் சமத்துவக் கொள்கைக்கு அவமானச்சின்னம். இத்தனை ஆண்டுகளாக இதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பது, அரசின் முழுமையான தோல்வி.

உடனடியாக இந்த பிரிவினை முறையை நிறுத்தி, அனைத்துக் குழந்தைகளுக்கும் சம உரிமையுடன் ஒரே அங்கன்வாடியில் கல்வி மற்றும் ஊட்டச்சத்து வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது


உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...



தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்ட பகுதியில்

# தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்



திருப்பூர் மார்ச்: 26

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம்.. இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளதையொட்டி மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டபகுதியில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடி துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் அமைக்கப்படவுள்ள வாக்குப்பதிவு மையத்தில் தேவையான குடிநீர்வசதி, கழிப்பிடவசதி, மாற்றுத்திறனாளிகள் சாய்தளவழி, வாக்காளர்கள் வாக்களிக்க தேவையான வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

கரடிஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட சுருளிஅள்ளி கிராமத்தில்

# ஸ்ரீசின்ன செல்லியம்மன், ஸ்ரீபெரியசெல்லியம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம்

## கரகத்தின் பிராண பிரதிஷ்டை பெருவிழா நடைபெற்றது



கிருஷ்ணகிரி மார்ச் 27:

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தை அடுத்த சுருளிஅள்ளி கிராமத்தில் ஸ்ரீசின்ன செல்லியம்மன், ஸ்ரீபெரிய செல்லியம்மன், ஸ்ரீ முணியப்பன், ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ நாகம்மாள், ஆகிய சுவாமிகளின் கரகத்தின் பிராண பிரதிஷ்டை செய்து மகா கலச அபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மூன்று நாட்களாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் முதலாவதாக கணபதி ஹோமம், ஸ்ரீசின்ன செல்லியம்மன், ஸ்ரீபெரிய செல்லியம்மனுக்கு முகூர்த்தக்கால், பாளிகை போடும் நிகழ்ச்சி, மற்றும் கங்கணம் கட்டுதல், பின்னர் கொடியேற்றி தீபாராதனை நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து இரண்டாவது நாளாக கணபதி பூஜையுடன் துவங்கிய விழா கங்கைபூஜையுடன், தென்பெண்ணை ஆற்றில் தீர்த்தம் எடுத்து வருதல், கரிகால ஊர்வலம், உள்ளிட்டவையும் யாக பூஜை திரவிய ஹோமங்களுடன், மங்களாரத்தி ஸ்ரீ சின்னசெல்லி, ஸ்ரீபெரியசெல்லி கரகத்திற்கு மூலாலய பிராண பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்னர் மூன்றாம் நாளின் முக்கிய நிகழ்ச்சியாக ஸ்ரீ சின்ன செல்லியம்மனுக்கும், ஸ்ரீ பெரிய செல்லியம்மனுக்கும் மகா கலச அபிஷேகமும், அலங்காரத்துடன், தீபாராதனைகளுடன் பிரசாதம் வழங்கப்பட்டது. பின்னர் கோபூஜைதம்பதி பூஜை கன்னியாபூஜை ஆகியவன நடைபெற்று,

இறுதியாக ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. கிராம மக்கள் அனைவரும் சுபிட்சத்துடன் வாழ வேண்டி நடைபெற்ற இந்த விழாவில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராள மக்கள் கலந்து கொண்டு சின்ன செல்லியம்மன் பெரிய செல்லியம்மனை வழிபட்டுச் சென்றனர். ஊர் கவுண்டர் சந்திரன், மந்திரி கவுண்டர் ஆறுமுகம், கோம் கவுண்டர்கள் கோவிந்தராஜ், கோவிந்தசாமி, முருகன், ராஜாமணி, பூசாரிகளான பி.சி. கணக்கன், அப்பு, ராஜாமணி, சிவகுமார், உள்ளிட்ட சுருளிஅள்ளி ஊர் பொதுமக்கள், ஊர் கவுண்டர்கள் முக்குளம், ஓபிளி, உள்பட அனைத்து தர்மகர்த்தாக்கள் மற்றும் ஓபிளி கவுண்டர்கள், ஊர் கவுண்டர்கள், மந்திரி கவுண்டர்கள், கிராம ஊர் பொதுமக்கள், மற்றும் கோயில் நிர்வாக குழுவினர் வெகு சிறப்பாக செய்திருந்தனர்.

# கியாஸ் விலை உயர்வு : மண் அடுப்புக்கு மாறும் பொதுமக்கள்

## வெயிலின் காரணமாக மண் பானைகளின் விற்பனையும் அதிகரிப்பு

ஈரோடு மார்ச் 27

அமெரிக்கா ஈரான் போர் காரணமாக கியாஸ் விலை அதிகரித்து உள்ளது. மேலும் கியாஸ் சிலிண்டரும் உரிய நேரத்தில் கிடைப்பது இல்லை. எப்போது வேண்டுமானாலும் கியாஸ் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இதனால் பொது மக்கள் கியாஸ் அடுப்பில் இருந்து மண் அடுப்புக்கு மாற வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். இதனால் மண்பாண்டம் விற்கும் கடைகளில் மண் அடுப்புகள் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது.

மேலும் பொது மக்கள் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க குளிர்ந்த தண்ணீரைஅருந்துகின்றனர். பிரிட்ஜில் உள்ள தண்ணீர் உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் மண் பானை தண்ணீரை மக்கள் அதிகம் அருந்துகின்றனர்

இதனால் மண் பானைகளின் விற்பனையும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த பானைகள் ஈரோடு நசியனூர் அம்மன் டிரேடர்சில் ஏராளமாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. 5 லிட்டர் முதல் 25 லிட்டர் வரை இங்கு மண் பானைகள் உள்ளன. இது பற்றி அம்மன் டிரேடர்ஸ் உரிமையாளரும் ஈரோடு மண் பாண்ட அமைப்பு சாரா தொழிலாளர் நல சங்க தலைவருமான வெங்கடாசலம் கூறியதாவது

இப்போது கோடைகாலமாக இருப்பதால் மண் பானைகளின் விற்பனை அதிகரித்துள்ளது. பொது மக்களின்ரசனைக்கு ஏற்ப மண் பானைகளில் பைப் வைத்தும் கொடுக்கிறோம். மேலும் மண் பானைகளின் வெளிப்புறத்தில் பீங்கான் வைத்தும் தயார் செய்கிறோம். இதை வட இந்தியர்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். மேலும் கோவில் திருவிழாக்களின் போது அக்னி சுட்டிகள் வேண்டுதல் பொம்மை உருவுகளும் தயார் செய்து கொடுக்கிறோம். கியாஸ் விலை உயர்வு தட்டுப்பாடு காரணமாகமண்அடுப்புகளின்விற்பனையும் அதிகரித்து உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



# திமுக அரசுக்கு எதிராக பொது மக்களிடம் துண்டு பிரசுரம்

## இந்து முன்னணி மாநில பொதுச் செயலாளர் கிஷோர் குமார் பேட்டி

ஈரோடு மார்ச் 27

இந்து முன்னணி மாநில பொதுச் செயலாளர் கிஷோர் குமார் ஈரோட்டில் நிருபர்களிடம் கூறியதாவது ஈரோடு பெரிய மாரியம்மன் கோவிலுக்கு சொந்தமான 12.66 ஏக்கர் நிலத்தை சி.எஸ்.ஐ நிர்வாகம் ஆக்கிரமித்துள்ள நிலையில்,

அதனை மீட்க நீதிமன்றம் உத்தரவிட்டும் கடந்த ஐந்து ஆண்டுகால திமுக ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை . கோவில் நிலத்தை மீட்டு 80 அடி சாலை விரிவாக்கம் மற்றும் கோவில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை அரசு தொடர்ந்து புறக்கணித்து வரகிறது . திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற அனுமதி மறுப்பு மற்றும் பல்வேறு இடங்களில் திமுக அரசு இந்து விரோத போக்கை வெளிப்படுத்தி வருகிறது.

பெரிய மாரியம்மன் கோவில் நிலத்தை மீட்க வலியுறுத்தி ஏப்ரல் 2ம் தேதி 10,008 பெண்கள் பங்கேற்கும் பிரம்மாண்ட தீர்த்த அபிஷேக ஊர்வலம் நடைபெறும். தொடர்ந்து ஏப்ரல் 5ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் வீடு வீடாகச் சென்று 'இந்து விரோத திமுகவை தோற்கடிப்போம்' என்ற துண்டுப் பிரசுரங்கள் மூலம் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் .

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது இ'ந்து முண்ணனி மாவட்ட தலைவர் ஜெகதீசன், மாவட்ட பொதுச் செயலாளர் கார்த்தி மற்றும் நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

# சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவில் தெப்பக்குள தடுப்புச் சுவர் கட்டும் பணிகள்

## தலைமை பொறியாளர் நேரில் ஆய்வு செய்தார்



சுசீந்திரம்.மார்.27

சுசீந்திரம்தாணுமாலயசுவாமிகோவில் தெப்பக்குளதடுப்புசுவர்திடீரெனசரிந்து விழுந்தது தற்போது தெப்பத் திருவிழா வர உள்ள நிலையில் விரைந்து பணிகளை முடிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர் கோரிக்கை ஏற்று தெப்பக்குளம் தடுப்பு சுவர் கட்டுவது குறித்து பொறியாளர்கள் சென்னையிலிருந்து வருகை புரிந்து ஆய்வு செய்து அறிக்கையினை சென்னை தலைமைஅலுவலகத்திற்கு அனுப்பி வைத்தனர் அதன் பேரில் தெப்பக்குள தடுப்புச் சுவரை பழமை மாறாமல் கட்டுவதற்காக டெண்டர் விடப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது இந்தப் பணியினை ஆய்வு செய்வதற்காகசென்னையில்இருந்து தலைமை பொறியாளர் பெரியசாமி கண்காணிப்பு பொறியாளர் சச்சுதானந்தம் திருநெல்வேலி மண்டல பொறியாளர் சிவகுமார் ஆகியோர் வருகை புரிந்து தடுப்பு சுவர் கட்டும் பணியை பார்வையிட்டு தடுப்பு சுவரின் தரம் குறித்தும் ஆய்வு செய்தனர் பின்பு தெப்ப திருவிழா விரைவில் வருவதால் பணியினை விரைந்து முடிக்க கூறினார் அவருடன் கோவில்களின் இணை ஆணையர் ஜான்சி ராணி உதவி கோட்ட பொறியாளர் முருகேசன் செயர் பொறியாளர் ஆறுமுகம் மண்டல செயற் பொறியாளர் சிவகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்

# தேரூர் பேரூராட்சி சார்பில் அனைவரும் வாக்களிக்க வேண்டி விழிப்புணர்வு பேரணி



சுசீந்திரம், மார்ச். 27

தேரூர் பேரூராட்சி சார்பில் 100% வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி தேரூர் பேரூராட்சியில் நடைபெற்றது. இதற்கு பேரூராட்சி செயல் அலுவலர் சங்கர சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். தேரூர் தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் முன்னிலை வகித்தனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் 100% வாக்குப்பதிவினை வலியுறுத்தி "விற்பனைக்கல்ல எனது வாக்கு, உங்கள் வாக்கு உங்கள் உரிமை, வாக்களிப்போம் நாட்டை காப்போம்" ஆகிய விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கைகளில் ஏந்தி சென்றனர்.

பேரூராட்சி அலுவலக வளாகத்தில் இருந்து புறப்பட்ட இந்த பேரணி முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் பேரூராட்சி அலுவலக வளாகத்தில் முடிவடைந்தது. இதில் தேரூர் தனியார்மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், பேரூராட்சி அலுவலக பணியாளர்கள், பேரூராட்சி பரப்புரையாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரும் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதிப்படுத்தும் விதமாக வாக்காளர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# இறந்து கிடந்த மூதாட்டி காவல்துறையினர் விசாரணை



இரணியல். மார்ச். 27

இரணியல் அருகே சுக்கான் கடை ஐக்கிய புரம் என்ற இடத்தில் சுமார் எண்பது வயது மதிக்கத்தக்க ஒரு மூதாட்டி இறந்து கிடப்பதாக இரணியல் காவல் நிலையத்தில் தகவல் கிடைத்தது இதனை அடுத்து இரணியல் போலீஸ் உதயம் பிணத்தை கைப்பற்றி ஆசாரி பள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்ய அனுப்பி வைத்தனர் இந்த நிலையில் வில்லுக்குறி சரல்விளை பகுதியில் சேர்ந்த கமலேசன்(60) தனது தாயாரை காணவில்லை என்று இரணியல் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார் இரணியல் போலீஸ் ஏற்கனவே எடுத்த போட்டோ காண்பித்த போது இறந்தவர் அவரது தாயார் அம்மாள் (82) என்று உறுதி ஆனது இது குறித்து இரணியல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்து கிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# திருவெண்ணெய்நல்லூர் விசிக வடக்கு ஒன்றிய செயலாளர் நியமனம்



திருவெண்ணெய் நல்லூர். மார்ச்.27

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மணக்குப்பம் கிராமத்தை சேர்ந்த கே. பழனிச்சாமி என்பவரை திருவெண்ணெய்நல்லூர் விசிக வடக்கு ஒன்றிய செயலாளராக நியமனம் செய்த விசிக தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களுக்கும், பரிந்துரை செய்த மாவட்ட செயலாளர் வீர. விடுதலைச்செல்வன் க்கும் மற்றும் மண்டல செயலாளர், மண்டல துணை செயலாளர், மாவட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

ஸ்ரீ புரம் அறக்கட்டளைக்கு

# ரூ.15 லட்சம் சி.ஸ்.ஆர் நிதி – ஆம்புலன்ஸ் சேவைக்கு புதிய முயற்சி

திருப்பூர்: மார்ச் 27

திருப்பூர் ஷெரீப் காலனியில் செயல்பட்டு வரும் ஸ்ரீ புரம் அறக்கட்டளை, 2013ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இலாப நோக்கற்ற தன்னார்வ அமைப்பாகும். நகரின் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பின்னலாடை தொழில் துறை வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் உறுப்பினர்களாக உள்ள இந்த அமைப்பு, கடந்த 13 ஆண்டுகளில் பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான சமூக மற்றும் தொழில் வளர்ச்சி திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. பின்னலாடைத் துறையின் ஆண்டு வர்த்தகத்தை ரூ.18,000 கோடியிலிருந்து ரூ.1 இலட்சம் கோடியாக உயர்த்தும் நோக்கில் செயல் திட்ட அறிக்கைதயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள், விழிப்புணர்வு கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, முதலிபாளையம் கிராமம் மாணிக்காபுரம் புதூர் குளம் புனரமைப்பு, நீர்வழித்தட சீரமைப்பு, மரக்கன்று நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோல், காவல்துறைக்கு கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல், திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு, அரசு மருத்துவ மனைகளுக்கு, மருத்துவ உதவிகள் மற்றும் இரத்த தான முகாம்கள் ஆகிய சமூகப்பணிகளிலும் அமைப்பு சிறப்பாக செயல்பட்டுள்ளது.

நிஃப்டி கல்லூரியில் நடப்பு ஆண்டு 20262027 சேருவதற்கு, பொருளாதாரத்தில் பின்தங்கிய பிளஸ் 2 மாணவர்களுக்கு உயர்கல்வி உதவியாக "ஸ்ரீபுரம் அறக்கட்டளை" சார்பில் சிறப்பு கல்வி உதவித்தொகை திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், குடும்பத்தின் பொருளாதார நிலை (பெற்றோர் இல்லாத/ ஒற்றை பெற்றோர்) பெற்றோரின் வருமானம் உள்ளிட்ட தகுதிகள் அடிப்படையாக கொண்டு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்பட்ட 25 மாணவர்கள்/மாணவியருக்கு, அவர்கள் முதலாம் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 50% வரை உதவித்தொகை வழங்கப்படும்.

மாணவர்களின் கல்வி கனவை நனவாக்கவும், உயர்கல்விக்கு ஒரு நல்ல வழிகாட்டுதலை உருவாக்கவும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள தகுதியான மாணவர்கள் விரைவாக விண்ணப்பித்து இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக CSR நிதியின் மூலம் அனுகிரகா ஃபேஷன்ஸ் மில்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திலிருந்து மோகன் ரூ.15 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை பயன்படுத்தி ஒரு முழுமையான ஆம்புலன்ஸ் வண்டி வாங்க திட்டமிடப்பட்டுள்ளது இந்த ஆம்புலன்ஸ் சேவை வட்டமலை கிராம மக்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது. அவசர மருத்துவ தேவைகளில் உடனடி உதவி கிடைக்கும் வகையில் இந்த சேவை பயன்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் ஸ்ரீ புரம் அறக்கட்டளை நன்றி தெரிவித்துள்ளது. இத்தகவலை சேர்மன் சண்முகம், தலைவர் ஜெயசித்ரா சண்முகம், செயலாளர் காண்டீபன், பொருளாளர்மெஜஸ்டிக்கந்தசாமிமற்றும்நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.



தென்காசி தெற்கு மாவட்ட திமுக கலைஞர் அறிவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர் அணி (War room) தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் அணி நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர் அணி அமைப்பாளர்கள், ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டம்

# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 பாதுகாப்பு குறித்தஆலோசனை கூட்டம்



திருப்பூர் மார்ச் 27

திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வருகின்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, திருப்பூர் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி, திருப்பூர் மாவட்ட தேர்தல் மேற்பார்வையாளர் (காவல் துறை) ராகுல் ஹெக்டே, மற்றும் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் க்ரிஷ் யாதவ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் துணை ராணுவப்படை உயர் அதிகாரிகள் மற்றும் திருப்பூர் மாவட்ட தேர்தல் பிரிவு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலும் திருப்பூர் மாவட்ட தேர்தல் மேற்பார்வையாளர் (காவல் துறை) ராகுல் ஹெக்டே

, திருப்பூர் மாவட்டத்தின் பதட்டமான வாக்குச்சாவடி பகுதிகளை நேரில் ஆய்வு செய்தார், அப்போது திருப்பூர் மாவட்ட உட்கோட்ட காவல் அதிகாரிகள் மற்றும் காவல் நிலைய பொறுப்பு அதிகாரிகள் உடனிருந்தனர்.

### சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி

# தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்



திருப்பூர் மார்ச்: 27

மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் மாநகராட்சி, தியாகி திருப்பூர் குமரன் பேருந்து நிலையம் அருகில் உள்ள உழவர் சந்தையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து காய்கறிகள் மூலம் விழிப்புணர்வு. ஏற்படுத்தப்பட்டுள்ளதை பார்வையிட்டு வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி( தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப் பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளதையொட்டி மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் உழவர் சந்தையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து காய்கறிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதை பார்வையிட்டு வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, இணை இயக்குனர் (வேளாண்மை) எம்.ஆதிசாமி, துணை இயக்குனர் (வேளாண்

விற்பனை வணிகம்) எஸ்.சண்முகசுந்தரம்செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதிஸ்குமார், வேளாண் விற்பனை சங்க செயலாளர் எஸ்.வெங்கடாசலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி பி.மீனாம்பிகை, விவசாயி வியாபாரிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்..



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, 53 கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை அரசு நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் .ஷாஜகான், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் சேகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்

### திருச்சி மாவட்டத்தில்

# 24,000 இடங்களில் விளம்பரங்கள் அகற்றம்



திருச்சி, மார்ச். 27

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது சட்டமன்ற தொகுதிகளிலும் கடந்த 15ம் தேதி முதல் பொது மற்றும் தனியார் சுவர்களில் அனுமதிக்கப்படாத விளம்பரங்கள், போஸ்டர்கள், பதாகைகள் அகற்றப்பட்டு வருகின்றன. மாவட்டம் முழுவதும் இதுவரை 15,154 பொது இடங்களிலும், 9,225 தனியார் இடங்களிலும் என மொத்தம் 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளம்பரங்கள், போஸ்டர்கள் அகற்றப்பட்டுள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தேர்தல் விதிமுறைகளை மீறிய விளம்பரங்களை அகற்றும் பணியின் ஒரு பகுதியாகும்.



### துறையூர் அருகே

# அரசுபள்ளியில் தொழுநோய் விழிப்புணர்வு நிகழ்வு

திருச்சிராப்பள்ளி மாவட்டம் உப்பிலியபுரம் ஒன்றியத்தில் உள்ள வெங்கடாசலபுரம் மானிய நடுநிலைப் பள்ளியில் தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளி தலைமையாசிரியர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தொழுநோய் பணிகள் துணை இயக்குனர் டாக்டர் சாந்தி, நோய் பற்றிய விழிப்புணர்வு, தடுப்பு முறைகள் மற்றும் நோய் பரவாமல் தடுக்கும் வழிகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார்.

### திருச்சியில்

# கஞ்சா கடத்திய ஐந்து பேர் மீது குண்டாஸ்

திருச்சி, மார்ச். 27

திருச்சி மாவட்டம் ராம்ஜி நகர் பகுதியில் கடந்த மாதம் 20ஆம் தேதி அன்று 7 கிலோ கஞ்சா விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக தீனதயாளன், தரனேஸ்வரன், ராஜாராம், ஜெயசூர்யா, ஆனந்த் ஆகிய ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களின் தொடர் குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில், மாவட்ட எஸ்பி செல்வ நாகரத்தினம் ஐந்து பேரையும் குண்டர் சட்டத்தில் கைது செய்ய உத்தரவிட்டார்

### திருப்பத்தூர் மாவட்டத்தின்

# இந்திய சாம்பல் நிற பறவையினை "வாக்கு ராணியாக அறிமுகம்

### மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்தார்



திருப்பத்தூர்:மார்ச்:27,

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026முன்னிட்டு,100%வாக்களிப்பதன்முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருப்பத்தூர் மாவட்டத்தின் பறவையான இந்திய சாம்பல் நிற இருவாச்சி பறவையை திருப்பத்தூர் மாவட்டத்தின்

"வாக்கு இராணியாக" அறிமுகம் செய்யப்பட்டதுடன், "வாக்கு இராணி" விழிப்புணர்வு லோகோவை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி அறிமுகம் செய்தார். உடன் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை டாக்டர் உமாமகேஸ்வரி, திட்ட இயக்குநர் ( மகளிர் திட்டம்) விஜயகுமாரி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உள்ளனர்.

# தேர்தலில் மதிமுக, மக்கள்நீதி மையம் போட்டியிடாதது தோல்வி பயம்

### பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினர் பேட்டி



மார்த்தாண்டம், மார்ச்.27

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பாரதிய ஜனதா கட்சியின் தேசிய பொது குழு உறுப்பினர் உமாரதி களியக்காவிளை அருகே சாத்தங்கோடு தனியார் மண்டபத்தில் வைத்து செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மக்கள் நீதி மைய தலைவர் தேர்தலை புறக்கணிக்கிறத்தில் எந்த வித ஆச்சரியமோ, அதிசயமோ கிடையாது. கடந்த முறை கோவையில் எங்களது தேசிய மகளிர் அணி தலைவியிடம் தோல்வியடைந்து பின்னங்கால் பின்னறி அடிக்க ஓடியவர். ஒரு ராஜ்யசபா சீட்டுக்கு வேண்டி காலை பிடித்து கொண்டிருந்ததை நாம் பார்க்க தானே செய்தோம். ஆகையால் அவர் இந்த தேர்தலை புறக்கணித்து இருக்கலாம்

வைகோ வை பொறுத்த வரையில் அவர் ஒரு மூத்த அரசியல் வாதியாக இருந்தாலும் கூட இன்று அவர் அறிவாலயத்தின் செக்யூரிட்டி ஆக தான் இருந்து கொண்டு இருக்கிறார். ஆகையால் அவங்களுக்கு தெரியும் திமுக தோற்கிற கூட்டணி என்பதால் ஒரு வேளை புறக்கணித்து இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

தவெக வை தற்போது ஜட்ஜ்மென்ட் பண்ண முடியாது. அவர்களுக்கு இது முதல் தேர்தல். இப்போ தானே களத்துக்கே வந்து இருக்கிறார்கள். மக்கள் கொடுக்க கூடிய வாக்குகளை பொறுத்து தான் யார் அவர்கள் பக்கம் நிற்கிறார்கள் என்பதை முடிவு பண்ண முடியும்.

கட்சி மேலிடம் முடிவு செய்து கிள்ளியூர் தொகுதியை தமாக விற்கு ஒதுக்கி இருக்கிறது. நிச்சயமாக எங்களை பொறுத்த வரைக்கும் தவெக இருந்தாலும் சரி , திமுக வாக இருந்தாலும் சரி குமரி மாவட்டத்தில் இந்த முறை தேசிய ஜனநாயக கூட்டணி சார்பாக நிறுத்த கூடிய 6 வேட்பாளர்களும் வெற்றி பெற வேண்டும் என்பது தான் எங்களது நோக்கம். நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்பதில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. என்று பேட்டியின் போது அவர் தெரிவித்தார்



# அரசு பஸ்சில் எல்இடி திரையில் தேர்தல் விழிப்புணர்வு வாசகம்

### கலெக்டர், எஸ்பி துவக்கி வைத்தனர்

நாகர்கோவில், மார்ச்.27

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் அரசுபேருந்துகளில் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, பேருந்துகளில் எல்.இ.டி திரை வாயிலாக காட்சிப்படுத்துவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.ஸ்டாலின், ஆகியோர் பார்வையிட்டு, பயணிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர்.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் கூறுகையில்:

அரசு போக்குவரத்துகழகம் நாகர்கோவில் கோட்டம் சார்பில் சுமார் 400 அரசு பேருந்துகளில் எல்.இ.டி பொருத்தப்பட்டு, வாக்குரிமை பெற்ற அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பது குறித்த திரையிடப்பட்டு பயணிகள், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதோடு, பயணிகள் பேருந்துகளில் ஏறும் படிகட்டுகள் அருகே தேர்தல் விழிப்புணர்வு பதாகைகள் ஒட்டப்பட்டு, பயணிகளிடையே தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களை இணைக்கும் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளிடையே தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த டிஜிட்டல் தளம் பயன்படுத்தப்படுகிறது. என கூறினார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, நாகர்கோவில் உதவி காவல் கண்காணிப்பாளர் லலித்குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் நாகர்கோவில் பொதுமேலாளர் பாலசுப்பிரமணியன், பயணிகள், போக்குவரத்து பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### ஆம்பூர் அருகே

# முதியோர் இல்லத்தில் இலவச மருத்துவ முகாம்



திருப்பத்தூர்:மார்ச்:27

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே ஐயனூரில் இயங்கி வரும் எவர் கேர் கிளினிக் முதியோர் இல்லத்தில் முதல் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் முதியோர் இல்லத்தில் வசித்து வரும் முதியோர்களுக்கு இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அனைவருக்கும் உடல்நலத்தை மேம்படுத்தும் வகையில் நோய் எதிர்ப்பு சத்து ஊசி செலுத்தப்பட்டது.

மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இணைந்து முகாமை சிறப்பாக நடத்தினர். இந்த மருத்துவ முகாம் முதியோர்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் வகையில் பயனுள்ளதாக இருந்ததாக கூறப்படுகிறது.

## திருவரம்பூர் அருகே

# மின்சாரம் தாக்கி வாலிபர் சாவு

திருச்சி, மார். 27

திருச்சிதிருவெறும்பூர்காவல்நிலையஎல்லைக்குட்பட்ட பந்தலப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர், நேற்று (மார்ச் 25) தனது வீட்டின் சுவரை இடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அப்பகுதியில் சென்ற மின் கம்பியில்கை உரசி மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவல் அறிந்த திருவரம்பூர் போலீசார், அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புதுக்கடை அருகே

# பூட்டிய வீட்டிற்குள் அழுகிய நிலையில் தொழிலாளி பணம்

புதுக்கடை, மார்ச். 27

புதுக்கடை அடுத்த பூட்டேற்றி பகுதியை சேர்ந்தவர் சுரேஷ்குமார் (56) இவர் கொத்தனாராக வேலை செய்து வந்தார். இவருக்கு பாமா (41) என்ற மனைவியும் 2 மகன் களும் உள்ளனர். சுரேஷ்குமார் குடிப்பழக்கத்திற்கு அடி மையானதால் மனைவி மற்றும் மகன்கள் அவரை பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலையில் சுரேஷ்குமாரை கடந்த 4 நாட்களாக காணவில்லை. இந்த நிலையில் அவர் வீட்டில் இருந்து திடீரென நேற்று துர்நாற்றம் வீசியது. வீடு உட்பக் கமாக பூட்டியிருந்ததால் ஜன்னல் வழியாக அக்கம் பக்கத்தினர் சென்று பார்த்தபோது, சுரேஷ்குமார் அழுகி யய நிலையில் பிணமாக கிடந்தார். இது குறித்து அவரது மனைவிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர் புதுக்கடை போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சுரேஷ்குமார் உடலை மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்கு பதிவு செய்து சுரேஷ்குமார் சாவுக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## குமரியில்

# பள்ளி, கல்லூரி மாணவிகள் மாயம்; போலீசார் விசாரணை

நாகர்கோவில், மார்ச்.27

நாகர்கோவில், வடசேரி கிருஷ்ணன் கோயில் பகுதியை சேர்ந்தவர் முத்துக்குமார் மகள் ரித்திகா (18). இவர் நாகர்கோவிலில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் பிகாம் முதலாம் ஆண்டு படித்து வந்தார். கடந்த சில மாதங்களாக ரித்திகா கல்லூரிக்கு செல்லாமல் ஒரு அச்சகத்தில் வேலைக்குசென்றுவந்துள்ளார்.சம்பவதினம்வீட்டிலிருந்து வெளியே சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை. இதனால்அவர்தந்தை முத்துக்குமார்மகளின்செல்போனை தொடர்பு கொண்ட போது அது சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து அவர் வேலை செய்த இடம், உறவினர்கள், நண்பர்களிடம் விசாரித்தும் ரித்திகாவை பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை. இது குறித்து முத்துக்குமார் அளித்த புகாரின் பேரில் வடசேரி போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான மாணவியை தீவிரமாக தேடி வருகின்றனர். இதுபோன்று புதுக்கடை அருகே அம்சி பகுதியை சேர்ந்தவர் பெனிஸ்மா (19). இவர் பிளஸ் டூ படிப்பை முடித்துள்ளார். சம்பவ தினம் உறவினர் ஒருவர் திருமண நிகழ்ச்சியில் செல்வதாக கூறிவிட்டு வீட்டில் இருந்து புறப்பட்டு சென்றார். ஆனால் நீண்ட நேரம் ஆகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் பல்வேறு இடங்களில் தேடியும் அவர் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதையடுத்துபெற்றோர்புதுக்கடைபோலிஸ்நிலையத்தில் புகார் அளித்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## களியக்காவிளை அருகே

# பெண்ணை வெட்டிய கணவன், மனைவி மீது வழக்கு

களியக்காவிளை, மார்ச்.27

கனியக்காவிளை பகுதி கல்லுத்தறை விளை என்ற இடத்தை சேர்ந்தவர் செல்வரோஸ் மனைவி ரோஸ்மேபல் (52). இவருக்கும் இவரது கணவரின் உடன் பிறந்த தம்பி சுபனேஷ் (57) க்கும் வீட்டிற்கு மின் இணைப்பு எடுப்பது சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் சம்பவ தினம் ரோஸ்மேபல் வீட்டிற்கு சாலையோரம் நின்ற மின்கம்பத்திலிருந்து இணைப்பு எடுக்க முயன்றனர். அப்போது சுபனேஷ் மற்றும் அவரது மனைவி லலிதா குமாரி ஆகியோர் கத்தியால் ரோஸ் மேபலை குத்தி உள்ளனர். இதில் படுகாயம் அடைந்தவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காககுமரிஅரசுமருத்துவக்கல்லூரிமருத்துவமனை யில் சிகிச்சையில் இருந்தார். இது குறித்த புகாரின் பேரில் களியக்காவிளை போலீசார் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. இதையடுத்து பாதிக்கப்பட்ட ரோஸ் மேபல் தரப்பினர் குழித்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். நீதிமன்ற உத்தரவின்படி நேற்று களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.




தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 23 4 2026 அன்று நடைபெற உள்ளதையொட்டி தேர்தலில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் என் வாக்கு என் உரிமை என்ற சூப்பர் சுட்டி ஸ்டிக்கர்களை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பார்வதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் , கல்லூரி மாணவ, மாணவிகள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி

# திமுக சட்டத்துறை சார்பில் (WARROOM) திறப்பு விழா

தருமபுரி மார்ச் 27

தருமபுரிமேற்கு மாவட்ட திமுக சட்டத்துறை சார்பில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலையொட்டி பாப்பி ரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணி களுக்காக மாவட்ட கழக செயலாளர் இல்லத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சந்திர சேகரன் முன்னிலையில் , தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், P.பழனி யப்பன் தலைமை தாங்கி (WAR_ROOM) திறந்துவைத்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சில் வேட்பாளர் வழக்கறிஞர் திரு.




கதிரவன் மற்றும் கழக வழக்கறிஞர்கள், கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்

## குமரி – கேரள எல்லை பகுதியில் அமைந்துள்ள

# சோதனை சாவடிகள்; கலெக்டர், எஸ்பி ஆய்வு

நாகர்கோவில், மார்ச்.27

குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அழகுமீனா நேற்று (26.03.2026) காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் முன்னிலை யில் கன்னியாகுமரிகே ரள எல்லை பகுதியில் அமைந்துள்ள களியாக்கா விளை மற்றும் கோழி விளை சோதனை சாவடி கள் மற்றும் பதற்றமான வாக்குச்சாவடி மையங் களை நேரில் பார்வை யிட்டுஆய்வுமேறகொண் டனர். தொடர்ந்து கலெக்டர் கூறியதாவது:




கன்னியாகுமரி கேரள எல்லைபகுதியில் அமைந்துள்ள களியக்காவிளை மற்றும் கோழிவிளை சோதனைச் சாவடிகள் நேரில்பார்வையிட்டு ஆய்வு மேற்கொள் ளப்பட்டது. அங்கு வாகன சோதனைகள் முறையாக நடைபெறுகிறதா என்பதை யும், சோதனை சாவடிகளில் பொருத்தப் பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. மேலும் சோதனை யின் போது பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் குறித்த தகவல் பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டதோடு, வாகனங்கள் மற்றும் பேருந்துகளில் தகுந்த ஆவண மில்லாமல் கொண்டு செல்லும் பொருட் கள் குறித்தும், பணங்கள் குறித்தும் தீவிர மாக கண்காணிக்க வேண்டுமென காவல்துறையினருக்கு அறிவுறுத் தப்பட்டது.

மேலும் கிள்ளியூர் சட்டமன்ற தொகு திக்குட்பட்ட கீழ்குளம் பரவை லுத்தரன் தொடக்கப்பள்ளி, இராமன்துறை புனித ஜோசப் நடுநிலைப்பள்ளி, தூத்தூர் பயஸ் லவன் மேல்நிலைப்பள்ளி மற்றும் விள வங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட களியாக்காவிளை அரசு முஸ்லீம் தொடக்கப்பள்ள ஆகிய ஆகிய பதற்ற மான வாக்குச்சாவடி மையங்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இவ்வாறு கூறினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட் சியரின் நேர்முக உதவியாளர் சுகிதா, விள வங்கோடு சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் செந்தூர் ராஜன், வட்டாட்சியர் கள் ஜெகதா (கிள்ளியூர்), வயோலா பாய் (விளவங்கோடு), உசூர் மேலாளர் தாஜீ நிஷா, துறை அலுவலர்கள், காவல்துறை யினர் உட்பட பலர் கலந்துகொண் டார்கள்.

## சட்டமன்றத் தேர்தலில்

# தளவாய் சுந்தரம் போட்டியிட்டால் அவரை எதிர்த்து சுயேட்சையாக போட்டியிட்டு அதிக வாக்குகள் பெறுவேன்

### அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ நாஞ்சில் முருகேசன் பேட்டி



நாகர்கோவில்,மார்ச் 27

அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. நாஞ்சில் முருகேசன் நேற்று நாகர்கோவி லில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

முன்னாள்அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் ஆசி பெற்று 2011 சட் டமன்றத் தேர்தலில் நாகர்கோவில் தொகுதியில் போட்டியிட்டு 2011 2016 வரை நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்து பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வந் தேன். கட்சிக்காக கடுமையாக உழைத் தேன். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு முன்னாள் அமைச்சர் தளவாய்சுந்தரம் என் மீது பொய் வழக்கு போட வைத்து என்னை அழிக்க நினைத் தார். அந்த வழக்கை சட்டப்படி சந்தித்து வெற்றி பெற்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்ட மன்றத் தேர்தலில் வேட்பாளர்கள் போட் டியிடுவது தொடர்பாக எடப்பாடி பழனி சாமிஎன்னைஅழைத்துபேசாதது எனக்கு மிகுந்த மனவேதனை அளிக்கிறது.

நாகர்கோவில் மாநகராட்சியில் ஆறு மாமன்ற உறுப்பினர்கள் அதிமுகவை சேர்ந்தவர்கள். நாகர்கோவில் சட்டமன் றத் தொகுதியில் பல நலத்திட்டங்களை வழங்கி அதிமுகவின் வளர்ச்சிக்காக பாடுபட்டேன். நாகர்கோவில் சட்டமன் றத் தொகுதியில் அதிமுக சார்பில் யார் நின்றாலும் வெற்றி பெறும் அளவிற்கு தொகுதியில் களப்பணிகள் செய்து உள் ளேன். தளவாய்சுந்தரம் அதிமுகவிற்கும், எடப்பாடி பழனிசாமிக்கும், துரோகம் செய்து வருகிறார். குமரி மாவட்டத்தில் உள்ள ஆறு தொகுதியில் ஐந்து சட்டமன் றத் தொகுதிகளை கூட்டணி கட்சிகளுக் கும் ஒரு தொகுதி மட்டும் அதிமுகவிற்கு ஒதுக்கி இருப்பது வேதனை அளிக்கிறது. நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி அதி முகவின் வெற்றி தொகுதியாகும். இந்த தொகுதியை கூட்டணி கட்சிகளுக்கு விட்டு கொடுத்து விட்டு கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதியில் தளவாய்சுந்த ரம் போட்டியிடுவது அதிமுகவினரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி 72% சதவீதம் நாடார் சமுதாய மக்களைக் கொண்ட தொகுதியாகும். எங்கள் சமுதா யத்தை சேர்ந்த ஒருவருக்கு ஒரு தொகுதி கூட ஒதுக்காமல் எப்படி தளவாய்சுந்தரம் வெற்றி பெற முடியும்? அவர் வேண்டு மென்றே எங்களை ஓரங்கட்டி வருகிறார். எங்கள் வாக்குகள் மட்டும் பெற்றுக் கொண்டு எங்கள் சமுதாயத்திற்கு துரோ கம் செய்து வருகிறார். நான் பல கோடி கள் செலவு செய்து உள்ளேன். நாகர்கோ வில் சட்டமன்றத் தொகுதி எங்களுக்கு தராதது மிகுந்த வேதனையளிக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிமுக மற்றும் அதன் கூட்டணியில் போட்டியி டும் வேட்பாளர்கள் யாரும் நாடார் சமு தாயத்தை சேர்ந்தவர்கள் இல்லை என் பது அதிர்ச்சியளிக்கிறது. இதற்குகாரணம் தளவாய்சுந்தரம்தான். அவர்ஒருதுரோகி. அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்காக மட்டுமே நாங்கள் அதி முகவில் இருக்கிறோம். அவர் எங்களை நல்ல முறையில் நடத்துகிறார். நான் அவரை நேரில் சந்தித்தேன். அவர் நன் றாக பேசினார். அது போதும், நான் வேறு கட்சிக்கு செல்ல விருப்பம் இல்லை. உயிர் உள்ளவரை அதிமுகவில் தான் இருப்பேன். அதிமுக ஆட்சி அமைய வேண்டும் என்பது என்னுடைய விருப் பம். அதற்காக கடுமையாக உழைத்து உள்ளேன்.

கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி யில் போட்டியிடும் தளவாய்சுந்தரத்தை எதிர்த்து சுயேட்சைவேட்பாளராக போட் டியிடுவேன். தளவாய்சுந்தரத்தை காட்டி லும் அதிக வாக்குகள் பெறுவேன். அதிக மாக வாக்குகள் வாங்கவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன். நாகர் கோவில் தொகுதியிலும் சுயேட்சையாக போட்டியிடுவேன்.

நாடார் சமுதாய மக்கள் எனக்கு ஆதர வாக உள்ளனர். நாகர்கோவில் சட்டமன் றத் தொகுதியில் நாங்கள் ஆதரிக்கும் நபர் தான் வெற்றி பெற முடியும். இது தள வாய் சுந்தரத்தால் முடியாது. ஆறு தொகு தியிலும் நாடார் சமுதாய வேட்பாளர் களை நிறுத்தினால் மட்டுமே அதிமுக வெற்றி பெறும் என அவர் தெரி வித்தார்.

## சென்னை வர்த்தக மையத்தில் ஏப்ரல் 27 முதல் 29 வரை

# எரிசக்தி கண்காட்சி 'ரினியூஎக்ஸ் 2026



கோவை மார்ச்:27

தென் இந்தியாவின் பிரமாண்ட புதுப் பிக்கத்தக்க எரிசக்தி கண்காட்சி 'ரினியூ எக்ஸ் 2026': சென்னை வர்த்தக மையத் தில் ஏப்ரல் 27 முதல் 29 வரை 3 நாட்கள் நடைபெறுகிறது.

"ஒரு தசாப்தத்தின் தாக்கம், அபரிமித மான எதிர்காலம்" என்ற தலைப்பில் நடைபெற உள்ள 'ரினியூஎக்ஸ் 2026 கண் காட்சியில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்களை வரவேற்க காத்தி ருக்கிறது.மேலும்,சூரிய ஒளி மின்சாரம்,எரிசக்தி சேமிப்பு,உயிரிஎரி சக்தி,ஸ்மார்ட் கிரிட்கள் மற்றும் இதற் கான தீர்வுகள் ஆகியவற்றில் ஏற்பட் டுள்ள அதிநவீன முன்னேற்றங்கள் குறித்து 200க்கும் மேற்பட்ட முன்னணி பிராண்டுகள் இதில் காட்சிப்படுத்த உள் ளன.ஸ்வெலெக்ட் எனர்ஜி,விக்ரம் சோலார், எம்வி, இவால்வ் கிரீன்,கௌதம் சோலார் யாரி எனர்ஜிஸ், க்ரூ சோலார்,கோல்டி சோலார் வாட்ப வர், டெய்,பெஸ்டன் மற்றும் ரூப்சோல் உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்கள் இதில் பங்கேற்க உள்ளன.

தொழில்துறை வட்டமேசை மாநாடு கண்காட்சிக்கு முன்னதாக,புது ப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையைச் சேர்ந்த முக்கிய நபர்கள் பங்குபெற்ற 'தொழில்துறை வட்டமேசை மாநாடு' இன்று கோவையில் உள்ள ரெசிடென்சி டவர்ஸில் நடைபெற்றது.இதில் இந்தத் துறையின் வளர்ச்சி, தொழில்நுட்ப முன் னேற்றங்கள் மற்றும் புதிய வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தவட்ட மேசை மாநாட்டில் பல முன்னணி தொழில்துறை தலைவர்கள் தமிழ்நாடு மின் துகசவோர் சங்கத் தலைவர் சந் தோஷ், எனர்ஜி சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் முழுநேர இயக்குனர் மற்றும் துனைத் தலைவர்செல்லப்பன்,கேஆர்ஜிசோலார் இயக்குனர் சிவசாம் கோளா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்மு னைவோர் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் சங்கத் தலையா டொன்ஸ் அலெக்ஸ்,தமிழ்நாடு சூரிய ஒளி மின் சக்தி மேம்பாட்டாளர்கள் சங்க தலைவர் சிவக்குமார்.இன்பார்மா மார்க்கெட்ஸ் இந்தியா எரிசக்தி மற்றும் கட்டுமானப் பிரிவு முத்த குழு இயக்குனர் ரஜனீஷ் கட் டார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ரினியூாக்ஸ் 2026 கண்காட்சி அறிவிப்பு குறித்துப் பேசிய 'இன்பார்மா மார்க் கெட்ஸ் இன் இந்தியா நிறுவனத்தின் மூத்த குழு இயக்குனர் ரஜ்னீஷ் கட்டார் கூறுகையில்,தூய்மையான எரிசக்தி யைப்பயன்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள் ளது.மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக் திக்கு மாறும் இந்தியாவின் பயணத்தில் தன்னைமுன்னிலையில்நிறுத்தியுள்ளது. 2030ம் ஆண்டுக்கும் தூய்மையான எரி சக்தியில் தேசிய அளவில் தலைசிறந்து விளங்க வேண்டும் என்ற உறுதியான தொலைநோக்குப் பார்வையுடன்,காற் றாலை மற்றும் சூரிய ஒளி மின்சாரம் என சாதனைகளைப் படைத்து,மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை புதிய இரண்டிலும் குறிப்பிட உச்சங்களை எட் டியுள்ளது.

தமிழ்நாட்டின் மிக முக்கியமான தொழில் நகரங்களில் ஒன்றான கோயம் புத்தூர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்துவதில் முன்னோடியாக உரு வெடுத்துள்ளது. அக்டோபர் 2025 நிலவ ரப்படி 1,000 மேற்பட்ட வீடுகளில்

# தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளை சொற்பொழிவு

தஞ்சாவூர் மார்ச் 27

தஞ்சாவூர் தமிழ் பல்க லைக்கழகத்தில் இலக்கி யத்துறை சார்பில் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அறக் கட்டளை சொற் பொழிவு நடை பெற்றது.

சொற்பொழிவுநிகழ்ச்சி யில் மதுரை தியாகராஜர் கல்லூரி பேராசிரியரும் பேச்சாளருமான கு. ஞான சம்பந்தம்கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் பேசிய தாவது: அந்தக் காலத்தில் சட்டம் படித்து விட்டு சிங்கப்பூ ரில் தொழில் செய்த சி.பா. ஆதித்தனார் தான் ஈட்டிய வருவாயில் பத்திரிக் கையை தொடங்கினார். அப்போது இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த கால கட்டம் அச்சடிக்க காகிதம் கிடைக்காத அந்த காலத்தில் பல பத்திரிகை கள் மூடப் பட்டன. இந்த சூழ் நிலையிலும், ஆதித்தனார் தானே காகிதத்தை தயா ரித்து பத்திரிக்கை யைந டத்தினார். .நாம் தமிழர் கட்சியை தொடங்கி தமிழுக்காக தமிழ் மொழிக்காக பல் வேறு வகையில் பாடு பட் டார்.அவர் தமிழ் மொழியை பேச்சு வழக் கில் எல்லோருக்கும் புரிந்து படிக்கும் வகை யில் அடித்தட்டு மக்களி டம் கொண்டு சேர்த்தார். எளிய மக்கள் பேசும் மொழிக்கு தான் உயிர் இருக்கிறது என எண்ணி அதை செயல் படுத்தி னார். உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு என வாழ்ந்து காட்டிய ஆதித்த



னார் 76 வயது வரை இருந்து சாதனை புரிந்து சாம்ராஜியத்தை உருவாக் கினார். தமிழர்களுக்கு காக ,

இனத்துக்காக, மொழி க்காக பாடுபட்ட சி. பா.ஆதித்தனார் அவரு டைய புகழை போற்று வோம் என்றார் ஞானசம் பந்தம் நிகழ்ச்சிக்கு துணைவேந் தர் குழு உறுப்பினர் பாரத ஜோதி தலைமை வகித்தார் .பதி வாளர் பொறுப்பு பன்னீர் செல்வ ம், இலக்கிய துறை பேராசிரியர் இளையா பிள்ளை, ராக வேந்திரன் ஆகியோர் பேசினர் அறக்கட் டளை ஒருங்கி ணைப்பா ளரும், இலக்கி யத்துறை தலைவருமான தேவி அனைவரையும் வரவேற் றார். இணை பேராசிரியர் ரவிச்சந்தி ரன் நன்றி கூறி னார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.